Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

வாசனை உலகில் ஓர் பரப்புரா!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# ஈழநாடு

EELA NADU

போன்: 339 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபால் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 4 ஆம் நாள் | றஜப் 10 | (19-12-61) செவ்வாய்க் கிழமை | இதழ் 263

# கோவா: இந்திய ராணுவம்

## தொடர்ந்து முன்னேற்றம்

## பல நகரங்கள் கைப்பற்றப்பட்டன

### 450 ஆண்டு அந்நிய ஆட்சி வீழ்ச்சியடைகிறது

புதுடில்லி, டிச. 18

**கடந்த 450 ஆண்டுகளாக போர்த்துக்கலின் காலனி ஆதிக்கத்தில் சிக்கித் தவித்து வந்த கோவா, டையு, டாமன் ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு விடுதலை அளிக்கும் பொருட்டு இந்திய ராணுவம் இன்று அதிகாலை திடீரென அங்கு பிரவேசித்தது.**

இப்பகுதிகளிலுள்ள 5 ஊர்களில் இந்திய ராணுவம் எவ்வித எதிர்ப்புமின்றிப் பிரவேசித்துவிட்டதாய்ச் செய்திகள் அறிவிக்கின்றன. ஹைதராபாத்தில் நடத்தப்பட்ட "பொலிஸ் நடவடிக்கை" போலவே கோவாவிலும் 3 பகுதிகளிலிருந்து இந்தியத் துருப்புக்கள் பிரவேசித்தன. பஞ்சிம் விமானநிலையத்தில் அந்நிய விமானஉதவி வந்து இறங்குவதைத் தடைசெய்யும் பொருட்டு அதன் ஓட்டப்பாதையை இந்திய படைகள் நாசம் செய்தன.

### டாமன், டையு பிடிபட்டன

டாமன், டையு ஆகிய இடங்களை இந்தியத்துருப்புக்கள் கைப்பற்றிவிட்டதாய் அறிவிக்கப்பட்டது. போர்த்துக்கல் துருப்புக்கள் பின்வாங்கி ஓட்டம் பிடித்து வருகின்றன.

### போர்க்கப்பல் தாக்கப்பட்டது

அஞ்சுதீவு பிடிபட்டுவிட்டதாயும் பலர் அங்கு சிறைப்படுத்தப்பட்டதாயும் மேலும் வந்த செய்திகள் கூறின. அங்கிருந்த போர்த்துக்கலின் போர்க்கப்பல் மீது இந்தியப் படைகள் தாக்கி அதன் பீரங்கிகளைச் சிதைத்து ஓயவைத்தன. கப்பலிலிருந்த மாலுமிகள் ஓடிவிட்டனர்.

### மக்கள் வரவேற்பு

முன்னேறிச் செல்லும் இந்தியத் துருப்புக்களை எல்லா இடங்களிலும் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பின்வாங்கி ஓடும் போர்த்துக்கேயர் தாங்கள் விட்டுச் செல்லும் இடங்களிலுள்ள பல கட்டிடங்களையும், பாலங்களையும் சுட்டெரித்து வருகிறார்கள். இந்தியத் துருப்புக்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் பொருட்டே பாலங்கள் தகர்க்கப்பட்டன. ஒரு நகரத்தையே அவர்கள் அழித்துவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. கோவாவுடனுள்ள ரேடியோ, டெலிபோன் தொடர்புகளும் செயலற்றுப் போயின. போர்த்துக்கேயரே இவ்வித நாச வேலை செய்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

கோவா எல்லை முழுதும் மூடப்பட்டுவிட்டது. அங்கு பொது சேவைகளை மாமூல் நிலைக்குக் கொண்டுவருவதும், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதுமே ராணுவத்தின் கடமை என்று அறிவிக்கப்பட்டது.

### குண்டுமாரி

பாரத விமானப்படை கோவா மீது குண்டுமாரி பொழிந்துவருவதாயும், விமான நிலையம்மீது சரமாரியான குண்டுவீச்சு நடைபெற்றதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது. விமான நிலையம் கைப்பற்றப்பட்டதாய் பின்வந்த செய்திகள் கூறின.

### நேரு, மேனன் அறிக்கை

"கோவா சம்பந்தமாக வேறு வழியில்லாமல்தான் பாரதம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டி யேற்பட்டது" என்று பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு இன்று நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

"ராணுவ நடவடிக்கை எடுப்பதில் பாரதம் மகிழ்ச்சியடையவில்லை. போர்த்துக்கீஸியர் வேறுவழியெதற்கும் இடம்வைக்கவில்லை. எனவேதான் நாம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது" என்று ஸ்ரீ நேரு கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் உத்தரவு

கொழும்பு, திங்கள்

கோவாவுக்குஆயுதங்கள், துருப்புக்கள் ஆகியவற்றை ஏற்றிச்செல்லும் போர்த்துக்கல் கப்பல், அல்லது விமானங்களை அனுமதிக்கவேண்டாமென பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா துறைமுக அதிகாரிகளுக்கும், சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டிருக்கிறார்.

## வேலையற்றிருக்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

### நிரந்தரக் காரியதரிசி வாக்குறுதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

பயிற்றப்பட்டு வேலையற்றிருக்கும் வடமாகாணத் தமிழ் ஆசிரிய சங்கத் தூதுக்குழு ஒன்றுகொழும்பு மத்திய தொகுதி எம்.பி. திரு. பீட்டர் கெனமன்உதவியுடன் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைப் பேட்டி கண்டது.

அரசாங்கம் செய்துகொண்ட ஆசிரிய ஊழிய உடன்படிக்கையின்படி தாங்கள் ஆசிரியத் தொழிலைத் தவிர வேறு எந்த அரசாங்க உத்தியோகத்திலும் சேரமுடியாததொரு இக்கட்டான நிலையில் இருப்பதாகவும் தங்கள் சங்கத்தில் 202 ஆசிரியர்கள் வேலையின்றி இருக்கின்றார்கள் என்றும் இடங்கள் காலியாக வரும்போது பயிற்சிபெற்ற வரிசைக் கிரமப்படியே நியமனம் வழங்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

இதற்கு நிரந்தரக்காரியதரிசி பதிலளிக்கையில் 1962ம் ஆண்டு பயிற்சிக் கல்லூரிகட்குப் பயிற்சிபெற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஏற்படும் காலி இடங்களில், பயிற்சி பெற்று வேலையற்றிருக்கும் ஆசிரியர்களையே நியமிக்கப்படும் என்று கூறினர்.

1962ம் ஆண்டு ஆரம்பத்தில், பயிற்சி பெற்று வேலையற்றிருக்கும் ஆசிரியர்களின் ஒரு பகுதியினருக்குக் கட்டாயம் இடம் கிடைக்குமென்றும், 1-11-60ன் பின் தனியார் ஸ்தாபனங்களால் ஆரம்பிக்கப்பட்டு அரசாங்க அங்கீகாரம் பெறக் காத்திருக்கும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் பொழுது பயிற்றப்பட்ட வேலையற்ற ஆசிரியர்களே அவ்விடங்களுக்கு நியமிக்கப்படுவார்ளெனவும் அவர் தெளிவுபடுத்தினர்.

## நேருஜியை எதிர்க்கலாமா?

### ஸ்ரீ பிரம்மசாரி மஹராஜ் தயக்கம்

அலகாபாத், டிச. 18

அடுத்துவரும் பொதுத் தேர்தலில் பிரதம மந்திரி நேருஜியை எதிர்ப்பதைப்பற்றி திரு. பிரபுதத்த பிரம்மசாரி மஹராஜ் இன்னும் தீர்மானிக்கவில்லை. இதை இன்னமும் நட்புமுறையிலேயே ஆலோசித்துவருவதாக அவர் சொன்னர். நேருஜியை எதிர்த்துப் போராடும்படி அவரை எதிர்க் கட்சிகள் தூண்டி வருகின்றன. சென்ற பொதுத்தேர்தலில், ஹிந்து சட்ட தொகுப்பு மசோதாவைப் பிரச்னையாகக்கொண்டு எதிர்த்தார்.

## நாவலர் வித்தியாசாலையில் திருவெம்பாவை ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

திருவெம்பாவைப் பூஜை ஆராதனையும், திருவாதவூரடிகள் புராணபடனமும் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அடியார் கோவிலில் பத்து நாட்களிலும் நடைபெற்றுவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

புரான விரிவுரை ஆசிரியர், பிரம்மஸ்ரீ க. வை. ஆ. சர்மா அவர்களினல் செய்யப்பட்டு வருகின்றது.

## சிவதொண்டன் வெள்ளி விழா

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 22ம் திகதி சிவதொண்டன் வெள்ளிவிழா கொண்டாடத் தீர்மானித்திருக்கிறது. அன்று ஊர்வலம் ஒன்று சிவதொண்டன் நிலையத்திலிருந்து புறப்பட்டு நல்லூர் கொழும்புத்துறை ஆதியாம் இடங்களுக்குச் சென்று பஜனையோடு வலம் வரும்.

கொழும்பு முதலிய இடங்களிலிருந்து இவ்விழாவிற்கு வருபவர்கள் 21ந் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்குப் பெண்கள் தங்கி நிற்பதற்குப் பிரத்தியேகமான இடமும், ஆண்கள் தங்கி நிற்பதற்கு வேறிடமுமாக எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. திருவாதிரையும் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

## தீ விபத்தில் 323 பேர் பலி!

சிட்னி, டிச. 18

மத்திய ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட பெரும் தீ விபத்து ஒன்றில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 323 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 600 பேர்காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

டயரும்ஸ்

## மலிவு விற்பனவு

"ஹான்ட்லூம்ஸ்" கேஸ்மென்ற் 20க்கு மேலான கலர்களில் 46" அகலம் விற்பனை விலை 2-60. டயரும்ஸ் யாழ்ப்பாணம்.

"பிறஸ்ஸியூர்ஸ்" சிறிதுஊத்தை பட்டவை. சாதாரணவிலை 6-25 விற்பனை விலை 3-75- சாதார விலை 4-50 விற்பனை விலை 2-25 சாதாரண விலை 3-50 விற்பனை விலை 1-75.

"ஹான்ட்லூம்ஸ்" பருத்திச் சேலைகள் அருப்புக்கோட்டை கடுமையான கலர்களில் செக் போட்டவைகள். சாதாரண விலை 12-50 விற்பனைவிலை9 -50

"சின்ஞலம்பட்டி" சேலைகள் "டொம்டொம்" செக்போட்டவை பலரக கலர்களில் உள்ளன. சாதாரண விலை 18-50 விற்பனை விலை 14-50 கொஞ்ச ஸ்டாக்குக்கள்தான் கைவசம் உண்டு.

"ஹான்ட்லூம்ஸ்" 'பெதறிற்" சேலைகள் றிபன் போடர்களும் "ரஸில்ஸ்" போட்டவையும் "பேஸ்றல்" கலர்களிலுள்ளன. சாதாரண விலை 24-75 விற்பனை விலை 22-30.

'சில்க்' 'பினிஷ்' பப்ளின் லைற் நீலக்கலர்களில் மர்த் திரமே உள்ளன சாதாரண விலை 4-50, 2-75க்கு விற்று முடிக்கிறோம்.

"பிறின்ரேட்" "கிறேப்"சில்க் 500க்கு மேலான டிசைன்களில் உள்ளன சட்டைகளுக்கு றவுக்கைகளுக்கும் மற்றும் வீட்டுப் பாவனைக்குத் தேவையான எல்லாச் சட்டைகளுக்கும் பாவிக்கக் கூடியது சாதாரண விலை 3-75 தொடக்கம் விற்பனைவிலை 2-25 தொடக்கம்.

இளைஞர்களுக்கு நேரடியாக வரவழைக்கப்பட்ட 'கிங்கொங்' "KING KONG" புஸ் சேட் பலவித ரகமான கலர்களிலும் எல்லா சைஸ்களிலும் கிடைக்கும் சாதாரண விலை 12-50 8-80 விற்று முடிக்கிறோம்.



## புற்று நோய்

ஆயுள்வேத முறையில் "யோகீஸ்வர ரசம்" புற்று நோயை வேரோடு அறுக்கும் என்பதை செயல் முறையில் நிலை நாட்டியுள்ளோம். இந்நோயால் பீடிக்கப்பட்டோர் எம்மை உடனே கலந்து ஆலோசிக்கவும், இந்நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒருவர் அளித்துள்ள சான்றிதழ்:-

"எனக்கு வலது பக்க சொக்கினுள் புற்றுநோய் கண்டு பலரிடமும் காட்டி மாருமல் எட்டு மாதங்களால் திரு. செல்லையா வைத்தியரிடம் 40 நாள் மருந்தில் பூரண சுகமடைந்து மூன்று (3) வருடங்கள் பார்த்துத்தான் வெளியிடுகின்றேன். சி. திரேசியா, 10-ம் வட்டாரம், அல்லைப்பிட்டி." இப்படியாக அநேகர் நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ளனர். நேரில் கலந்து ஆலோசிக்குக.

பொ. செல்லையா, ஆயுள்வேத வைத்திய புற்று நோய் நிபுணர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



**வியாபாரம்பெருக**

**விளம்பரம்செய்க**






அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்கத்தின் ஆதரவில் நல்லூர் தெற்கு ஸ்ரீகற்பகவிநாயகராலயத்தில் பிரம்மஸ்ரீ ச. ஞானேஸ்வரக் குருக்களால் பல பெண்மணிகளுக்கும் சிறுவர்களுக்கும் சமயதீட்சை அளிக்கப்பெற்றது.

# ரயில்வே ஊழியர்களுக்கு வீடமைப்புத் திட்டம்

கொழும்பு, திங்கள்

இலங்கை அரசாங்க ரயில்வேப் பகுதி அதன் ஊழியர்களுக்கு ஒரு லட்சத்து 35,000 ரூபாய் செலவில் வீடமைத்துக் கொடுக்கவிருக்கிறது.

இந்த நிதிவருடத்தில் அமைக்கப்படவிருக்கும். இந்த வீடுகள் சம்பந்தமான இறுதித் திட்டங்கள் சமீபத்தில் நடந்த ஒரு மகாநாட்டில் ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பாலாவினல் தயாரிக்கப்பட்டுவிட்டது.

கொழும்பிலுள்ள ரயில்வே தொழிலாளர்களுக்கென வீடுகள் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாயை ரயில்வே இலாகா ஒதுக்கியுள்ளது.

அநுராதபுரத்திலும் நாவலப்பிட்டியிலும் தொழிலாளர்களுக்கு வசிப்பிடம் அமைக்க ஒருலட்சத்து 50,000 ரூபாயும் கண்டியில் வீடமைப்புக்கென ஒரு லட்சத்து 50,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒகியா, வவனியா, அம்பேபுஸ்ஸ, யாழ்ப்பாணம், பொல்காவலை, அப்புத்தளை, கடுகணுவை, மட்டக்களப்பு, கணேவத்தை, கொம்பனித்தெரு ஆகிய இடங்களிலும் ரயில்வே ஊழியர்களுக்கு வசிப்பிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுதுள்ள தொழிலாளர் வீடுகளுக்கு குடிதண்ணீர், மின்சார வசதிகள் அளிக்கவும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


### பெயர் மாற்றம்

புத்தூர் மேற்கு நவற்கிரியிலிருக்கும் பாலன் செல்லன் ஆகியநான், இன்றுதொடக்கம் எனது பெயரை பாலன் செல்வராசாவென மாற்றி, அழைக்கப்படுவேனென்றும், சகல பத்திரங்களிலும் பா. செல்வராசா என்றுமட்டும் கைச்சாத்திடுவேவேனென்றும் அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இங்ஙனம், பா. செல்வராசா நவற்கிரி

### தேவை

தொழிற்சாலையில், பெக்கிங், வேலை செய்வதற்கு பெண்களும், சைக்கிள் சேல்ஸ்மேனும் உடனே தேவை. சம்பளம் முதல் மூன்று மாதங்களுக்கும் ரூபா 45-00, 60-00 கொமிஷனும் உண்டு. எக்கோணமிக் கார்ப்பரேஷன், இன்டஸ்றீஸ் அன் ஏஜன்ஸிஸ், 230, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# "பிக்குகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்"

## மகாநாயக்கதேரோக்கள் கருத்து

கண்டி, ஞாயிறு

"ஆசிரியத் தொழிலிலும் மற்றும் இதர சேவைகளிலுமுள்ள பௌத்த பிக்குகளை அச்சேவைகளில் தொடர்ந்திருக்க முடியாதபடி தடை செய்யக்கூடிய சட்டங்களை இயற்றுவது அவர்களுடைய உரிமைகளை மறுப்பதாகும். சேவையிலுள்ள பிக்குகளுக்கு 'கப்பகறுவா' (தர்மகர்த்தாக்கள்) மூலம் சம்பளம் வழங்கப்படவேண்டும். இந்த ஒழுங்கு முறை வினயா சட்டதிட்டங்களுக்கு அமைந்ததாகும். இதுதான் செய்யப்பட வேண்டிய ஒழுங்கு" என்று அஸ்கிரியமல்வத்தை மகாநாயக்கதேரோக்கள் உள்நாட்டு கலாசார அமைச்சருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிக்குகள் வேலை பார்ப்பது சம்பந்தமாக மந்திரிசபையின் உத்தேச தீர்மானம் பற்றி மகாநாயக்க தேரோக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு உள்நாட்டு கலாசார அமைச்சர் கடிதம் எழுதியிருந்தார். இதற்குப் பதிலாகவே மகாநாயக்கதேரோக்கள் மேற்கண்டவாறு தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான வருடகாலமாக தேசிய, சமயசேவைகளில் பிக்குகள் சேவைசெய்து வந்துள்ளனரென்றும் அவர்களை அவற்றிலிருந்து நீக்கி விடக்கூடாதென்றும் மகாநாயக்கதேரோக்கள் தங்கள் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

---

சென்னை, டிச. 18

சென்னையை அடுத்துள்ள ஆவடியில் நிறுவப்படவிருக்கும் கனரகவண்டித் தொழிற்சாலைக் கட்டிடத்துக்கான அஸ்திவாரக் கல்லை இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. மேனன் நாட்டுவார்.


## குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

**ஜெகஜோதி அன் கோ,**

குருதெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

**செல்வாஸ் (SELVAS)**

(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

யாழ்ப்பாண விற்பனையாளர்:

தமிழ்ப் பண்ணை, கே. கே. எஸ். விதி, யாழ்ப்பாணம்.



## அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

மலிவு விற்பனை **டயரும்ஸ்** யாழ்ப்பாணம்

# கோவாவுக்குள் பாரத ராணுவம் முன்னேறி செல்கிறது

## இரு நகரங்கள் கைப்பற்றப்பட்டன

### மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்கள் வரவேற்பு

பம்பாய், டிச. 18

இந்தியப் பிரதேசத்தில் போர்ச்சுக்கலின் ஆதிக்கத்தின் கீழுள்ள கோவா, டாமன், டியூ ஆகிய பகுதிகளில் காலனி ஆட்சி சீர்குலைந்ததாலும் அப்பகுதியிலுள்ள மக்களின் விடுதலை இயக்கத்துக்கு ஆதரவளிப்பதற்கும், அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி ஜனநாயக முறையில் நிர்வாகத்தைச் சீர் செய்யும் முகமாகவும் இந்திய தரைப் படையின் 17-வது அணி இன்று அதிகாலையில் அங்கு பிரவேசித்தது.

கோவாவுக்குள் மூன்று பகுதிகளாக பாரத துருப்புக்கள் பிரவேசித்தன. வடக்கில் சவந்தவாடிப் பகுதியிலும் தெற்கில் கார்வார் மார்க்கமாகவும் மேற்கில் மார்ச்கோவா மார்க்கமாகவும் பாரதத் துருப்புக்கள் பீரங்கிகள் முழங்க முன்னேறிச் சென்றன.

டாமனிலும் மூன்று பாதைகள் வழியாக பாரதத் துருப்புக்கள் பிரவேசித்தன. டியூவிலும் பாரதத் துருப்புக்கள் பிரவேசித்து முன்னேறிச்செல்கின்றன.

**இரு நகரங்கள் கைப்பற்றப்பட்டன**

கோவாவிற்குள் முன்னேறிச் செல்லும் பாரதத் துருப்புக்களை மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர். இரு நகரங்கள் போர்ச்சுக்கீஸிய ஆதிக்கத்திலிருந்து பாரதத் துருப்புக்களால் கைப்பற்றப்பட்டன. இன்று நண்பகல் கிடைத்த செய்தியில் ஆயுதங்களுடன் 30 பேரை பாரதத் துருப்புக்கள் சிறைப்பிடித்ததாக அறிவிக்கப்படுகிறது.

எதிர்பார்த்தபடி கோவா, டாமன், டியூ ஆகிய இடங்களில் பாரதத் துருப்புக்கள் முன்னேறிச் செல்வதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பஞ்சிமில் விமான நிலையத்தின் ஒரு பாதை உபயோகமற்றதாக்கப்பட்டுவிட்டது.

கோவாவில் ஒரு பட்டினத்தை போர்ச்சுக்கீஸியர் அழித்துவிட்டதாக கோவாவிலிருந்து லிஸ்பனுக்கு கொடுக்கப்பட்ட தகவலை பாரத அதிகாரிகள் இடைமறித்துக் கேட்டதில் தெரியவந்தது. இதுபோல் மற்றும் இடங்களையும் போர்ச்சுக்கீஸியர் அழிக்கத் திட்டமிட்டுள்ளனராம். பாலங்கள் சிலவற்றை அவர்கள் உடைத்ததுடன் சில இலக்குகளையும், ஸ்தாபனங்களையும் அவர்கள் தீ வைத்து நாசப்படுத்துகின்றனராம்.

**நகைகள் செல்கின்றன**

கோவாவிலுள்ள வங்கிகளிலிருந்து பெறுமதியான நகைகள் விமானங்களில் கராச்சி வழியாக லிஸ்பனுக்கு அனுப்பப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

கோவா வானொலி இன்று காலை 6-30 மணியிலிருந்து இயங்கவில்லை.

**விசேஷ பொலிஸ் படை செல்கிறது**

கோவா, டாமன், டியூ ஆகியவைகளுக்குள் பாரத துருப்புக்கள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் அதே சமயம் அவைகளின் பின்னால் விசேஷ ரிசர்வ் பொலிஸ் படையினர் அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு சென்று கொண்டிருக்கிறார்கள்.

**சுட்டுக் கொல்ல உத்தரவு**

நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு தீ வைத்தல், கொள்ளையடித்தல் கைப்பற்றல் போன்ற செயல்களில் ஈடுபட முயற்சிப்பவர்களைச் சுட்டுக் கொல்லும்படி பொலிசாருக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோவா எல்லையைச் சுற்றிப் பாரதத் துருப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

**கவர்னர் ஜெனரல் செய்திக்கு மறுப்பு**

கோவா கவர்னர் ஜெனரல் டி' சில்வா கோவாவைவிட்டு ஓடிவிட்டதாகவும் அவர் லிஸ்பனுக்கு செல்வதற்காக கராச்சியில் தங்கியிருப்பதாகவும் காலையில் வெளியான செய்தியை லிஸ்பனில் போர்ச்சுக்கல் அரசாங்க அதிகாரியொருவர் மறுத்தார்.

கோவாவிலுள்ள போர்ச்சுக்கல் அதிகாரிகள் பலரும் அங்கிருந்து கராச்சி வழியாக விமானத்தில் லிஸ்பனுக்குச் சென்றுவிட்டனர்.

கிராமப் புறங்களிலிருந்த போர்ச்சுக்கீஸிய குடும்பங்கள் பல கோவா தலைநகருக்கு வந்து சேர்ந்துள்ளன.

கோவாவின் தலைநகரான பஞ்சமிற்குப் போகும் பாதைகள் பலவற்றைப் போர்ச்சுக்கீஸியர் அடைத்துவிட்டதுடன் சில பாதைகளை நாசப்படுத்தியும் விட்டனர்.

கோவா, டாமன், டியூ ஆகிய பகுதிகளுக்குள் பிரவேசித்த பாரதத் துருப்புக்களுக்கு, போர்ச்சுக்கீஸியர் எதிர்த்துத் தாக்கினால் குறைந்தபட்ச பலாத்காரத்தை உபயோகிக்கும்படியும் வழிபாட்டு ஸ்தலங்களைப் பாதுகாக்கும்படியும் உத்தரவிடப்பட்டது.

## பாலாஜியின் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வியாபார நிலையமொன்றைச் சூழ்ந்துகொண்டு ஒருவர்பின் ஒருவராக பெருந்திரளான சனக்கூட்டம் நேற்று காலை 11–15 மணியளவில் முற்றுகையிட்டுக்கொண்டிருந்தது. தூரத்திலிருந்து இளைஞர்கள் ஓட்டம் ஓட்டமாகச் சென்று அதற்குள் புகுந்து கொண்டிருந்தார்கள். வீதியால் சென்றவர்களும் மர்மத்தைப் பார்ப்பதற்கு திசை திரும்பினர்.

அந்த வியாபார நிலையத்திற்குள் கொள்வனவு செய்யச் சென்றிருந்த தமிழ்த்திரை நடிகர் பாலாஜி கொள்வனவு செய்யவோ வெளியே செல்லவோ முடியாது விற்பனையாளர்பகுதியில் குல்லாவுடன் நின்று திக்குமுக்காடினர். சுமார் ஒருமணி நேரம் அவர் அதற்குள் நிற்கவேண்டியேற்பட்டது.

---

## உணவுத் தட்டுப்பாடு இல்லை!

கொழும்பு, திங்கள்

அரிசி,மாவு, சீனிமுதலியஅத்தியாவசிய உணவுப் பொருள்களில் தட்டுப்பாடு இல்லை என்று உணவுவர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை தெரிவித்தார்.

துறைமுக நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு உணவுப் பொருள்களில் கொள்ளை லாபம் அடிக்க முயற்சி செய்யும் வர்த்தகர்கள்மீது வழக்குத் தொடரப்படுமென்று திரு. ஆழ்வாப்பிள்ளை தெரிவித்தார்.

## "சண்டையை நிறுத்த உதவி புரிக!"

### கென்னடிக்கு ஷோம்பே தந்தி

### எலிஸபெத்வில்லி நகரம் ஐ. நா. வசமானது

லியப்போல்ட்வில்லி, டிச. 18

கடாங்காவின் தலைநகரான எலிஸபெத்வில்லியின் முக்கிய பகுதிகள் ஐ. நா. வசமாககிவிட்டபோதிலும் ஐ. நா. சிப்பந்திகளின் சுயேச்சையான நடமாட்டத்துக்கு இன்னும் சுதந்திரமில்லையென்று கூறப்படுகிறது.

எலிஸபெத் வில்லியில் சண்டை ஓய்ந்துவிட்டபோதிலும் சில சில இடங்களில் கடாங்காத் துருப்புக்கள் தொடர்ந்து எதிர்த்தாக்குதல் நடத்திவருவதாக அறிவிக்கப்படுகிறது.

எலிஸபெத்வில்லியில் தனியார் கட்டிடங்கள் சிலவற்றிலிருந்தும் சுரங்கக் கம்பனிக் கட்டிடமொன்றிலிருந்தும் கடாங்காத் துருப்புக்கள் சுட்டதாகவும் இதை நிறுத்தாவிட்டால் சுரங்கக் கம்பெனிக் கட்டிடத்தின் மீது விமானத் தாக்குதல் நடாத்தப்படுமென்று ஐ. நா. எச்சரிக்கை செய்துள்ளது. சுரங்கக் கம்பெனிக் கட்டிடத்தின் மீதிருந்து கடாங்காத் துருப்புக்கள் சுட்டதில் ஐ. நா. படையைச் சேர்ந்த எத்தியோப்பிய வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**ஷோம்பே திரும்பி விட்டார்**

எலிஸபெத் நகரிலிருந்து வட ரொடீஷியா எல்லைப் பகுதிக்கு தப்பி ஓடிய ஷோம்பே எலிஸபெத்வில்லிக்குத் திரும்பிவந்து அமெரிக்க ஜனாதிபதி கென்னடிக்குத் தந்திச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

காங்கோ மத்திய அரசாங்கப் பிரதமர் திரு. அடெளலாவைச் சந்தித்துப் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் உடனடியாக கடாங்காவில் சண்டையை நிறுத்துவதற்கு முயற்சி செய்யுமாறு திரு. கென்னடியை தமது தந்தியில் திரு. ஷோம்பே கேட்டுள்ளார்.

இந்த நிலையில் கடாங்காவில் சண்டையை நிறுத்துவது அபாயமென்றும் ஐ. நா. வின் நோக்கம் நிறைவேறாத சமயத்தில் சண்டையை நிறுத்துவது உசிதமற்றதென்றும் சண்டை நிறுத்தத்தை இந்தச் சமயத்தில் அமெரிக்கா ஆதரிக்காதென்றும் லியப்போல்ட் வில்லியிலுள்ள அமெரிக்கத் தூதர் தெரிவித்தார்.

கடாங்காவில் சண்டை நிறுத்தப்பட வேண்டுமென்ற பிரிட்டனின் யோசனையை காங்கோ விவகாரம் சம்பந்தமான ஐ.நா. ஆலோசனைக் கமிட்டி நிராகரித்து விட்டது. ஐ. நா. தற்காலிக தலைமைக் காரியதரிசி எடுத்துவரும் நடவடிக்கைகளை அந்தக் கமிட்டி பூரணமாக ஆதரித்துள்ளது.

## கோவா

## இந்தியநடவடிக்கைக்கு பிரிட்டன் கண்டனம்!

### அமெரிக்கா கவலை!

லண்டன், டிச. 18

கோவா, டாமன், டியூ ஆகிய போர்ச்சுக்கல் திட்டுக்களுக்குள் இந்தியா தனது துருப்புக்களை அனுப்பியுள்ளதைப் பிரிட்டன் கண்டித்துள்ளது.

கோவா சம்பந்தமாக இந்தியா பலாத்காரத்திலிறங்கக் கூடாது என்று பிரிட்டன் இந்தியாவுக்கு வேண்டுகோள் விடுத்து வந்துள்ளதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

"கோவாமீது இந்திய ராணுவத் தாக்குதல் மேற்கொண்டால் போர்ச்சுக்கல் -பிரிட்டன் உடன்படிக்கைக்கிணங்க போர்ச்சுக்கல்லுக்குப் பிரிட்டன் செய்ய வேண்டிய கடமைக்கிணங்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுபற்றி தீர்மானிக்க வேண்டியிருக்கும் என்று பிரிட்டன் முன்னர் தெரிவித்திருந்தது" என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

**அமெரிக்கா கவலை**

கோவா, டாமன், டியூ ஆகிய திட்டுக்களின் விடுதலைக்கு உதவி புரிய இந்தியத் துருப்புக்கள் அப்பகுதிகளுக்குள் பிரவேசித்ததுபற்றி உடனடியாக அபிப்பிராயம் தெரிவிக்க அதிகாரிகள்மறுத்துவிட்டனர்.

என்றாலும் 'இந்தியாவின் நடவடிக்கை கவலையளித்துள்ளது' என்று அமெரிக்க ராஜாங்க காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கோவா சம்பந்தமாக பலாத்காரம் பிரயோகிக்க வேண்டாமென்று இந்தியாவை அமெரிக்கா கேட்டு வந்ததாகவும் அந்த அதிகாரி கூறினர்.

## எண்ணெய் கம்பனி ஊழியர்கள்

### உஷார்படுத்தப் பட்டுள்ளனர்

கொழும்பு, திங்கள்

போனஸ் விஷயம் சம்பந்தமாக அகில இலங்கை எண்ணெக் கம்பனிகளின் தொழிலாளர் யூனியன், பெட்ரோல் சேர்விஸ் ஸ்டேஷன் தொழிலாளர் யூனியன், எண்ணெக் கம்ப்னிகள் குமாஸ்தாக்கள் மேற்பார்வை அதிகாரிகள் யூனியன் அங்கத்தவர்கள் ஆகியோர் நடவடிக்கை எடுக்கும்படி உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

எண்ணெக் கம்பனி பிரதிநிதிகளையும் யூனியன் பிரதிநிதிகளையும் தொழிற் கமிஷனர் இந்தவாரம் கூட்டவிருக்கும் மகாநாட்டுக்குஅழைத்துள்ளார்.

எண்ணெக் கம்பனி ஊழியர்களின் போனஸ் விஷயமாக பிரதம மந்திரிக்குச் சமீபத்தில் எழுதப்பட்ட கடிதத்துக்கு இன்னும் பதில்கூட வரவில்லையென்று யூனியன் காரியதரிசி தெரிவித்தார்.

ஞாபகப்படுத்துகிறோம்!

மலிவு விற்பனை

டயரும்ஸ் யாழ்ப்பாணம்

## மணி வாக்கு

*மதபோதனையை அத்திவாரமாகக்கொள்ளாத எந்த அரசிய ந்நல்வியும் எத்தகைய பயனும் தரமாட்டாது.*

*— காந்திஜி*


# ஈழநாடு

ஈழ நாடு

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ 4 உ (19-12-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## கோவா

கோவா மீது இந்தியா இராணுவ நடவடிக்கை எடுத்துவிட்டது. இது எதிர்பார்க்கப்பட்டதுதான். 14 ஆண்டுகளாகப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தது பாரதம். பிரிட்டனும், பிரான்சும் காட்டிய மேலான வழியைப் பின்பற்றி போர்ச்சுகலும் மரியாதையாக வெளியேறியிருப்பின், இந்த இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டியஅவசியம் இருந்திராது. வேறு வழியின்றி தங்கள் விருப்பத்துக்கு மாருக இந்திய் அரசாங்கம், போர்சுக்கல் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் மீது தண்டப் பிரயோகம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

நேயர்கள் இத் தலையங்கத்தைப் படிப்பதற்குள்ளாக சுண்டைக்காய் கோவா, இந்தியாவின் வசமாகியிருக்கலாம். டையூ முதலிய இடங்களில் போர்ச்சுக்கீசியர் எதிர்த்துத் தாக்குவதில்லை என்று அறிவித்ததுபோல், கோவாவிலும் செய்திருப்பின், ஒரு சில மணி நேரத்துக்குள்ளாக கோவாவில் போர்ச்சுக்கல் ஆதிக்கம் முடிவடைந்துவிடும். ஏனெனில் ஆறுயிரம் மைல் தூரத்திலிருந்து போர்ச்சுக்கல் இராணுவ உதவிகளை கோவாவுக்கு அனுப்புவதென்பது சுலபமன்று. மேலும், அப்படி முன்னேற்பாடாக வந்த ஓர் ஆயுத இராணுவக் கப்பலை சுயஸ்கால்வாய் வழியாக இந்தியாவுக்கு அனுப்ப முடியாதென்று ஐக்கிய அரபு குடியரசின் தலைவரான ஜெனரல் நாஸர் தடுத்துவிட்டார். இது பெரிய காரியம். இவ்வித தடைக்குப் பிறகும் போர்ச்சுக்கல் எதிர்த் தாக்குதலில் ஈடுபட எண்ணவும் முடியுமா என்பது சந்தேகம். தக்க சமயத்தில் எகிப்தின் ஜனதிபதி எடுத்த இந்த நடவடிக்கை, போர்ச்சுக்கலின் கிழக்கு ஏகாதிபத்தியத்துக்குக் கிடைத்த மரண அடியாகும்.

"நேட்டோ" என்ற வட அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் போர்ச்சுக்கல் சேர்ந்திருப்பதால், போர்ச்சுக்கலின் சார்பாக அந்த ஒப்பந்த நாடுகள், இந்தியாவுக்கு மாருக நடவடிக்கை எடுக்க நேரி' லாமென்று கூறப்படுகிறது. போர்ச்சுக்கலின் உளுத்துப்போன ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க 'நேட்டோ' நாடுகள் இந்தியாவுக்கு மாருக இராணுவ நடவடிக்கை எடுக்குமென்று நாம் நம்பவில்லை. அப்படிச் செய்வதாயின், அது பல நடுநிலைமை நாடுகளின் விரோதத்தையும் சம்பாதித்துக்கொள்வதாக முடியும். அத்துடனின்று இச்சந்தர்ப்பத்தை ரஷ்யா தனக்கு மிக சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும் கூடும். ஆகவே அப்படி முட்டாள்தனமாக "நேட்டோ" நாடுகள் செய்யாதென்றே கொள்வளாம்.

ஆக்கிரமிப்புக் குற்றத்தை இந்தியா செய்துள்ளதாகவும், அதன் மீது கூட்டு நடவடிக்கையை ஐக்கிய நாடுகள் சபை எடுக்க வேண்டுமென்றும் போர்ச்சுக்கல் முறையிடக்கூடும். ஆனல் ஏற்கெனவே

# கோவாவில் போர்த்துக்கல் ஆதிக்கம் ஏற்பட்ட வரலாறு

## 1510ம் ஆண்டு அந்நிய ஆட்சி உதயம்

**சமாதானமாகவே எப்பிரச்சினையும் தீர்க்கப்படவேண்டுமென்பதுதான் பாரதத்தின் கொள்கை ஆனல் 'சமாதானம்' என்பவர்களை 'இளிச்சவாயர்கள்' என்று மற்றவர்கள் நினைத்தால் என்ன செய்வது?**

**"கோவா சம்பந்தமாக ராணுவ நடிவடிக்கையை பாரதம் மகிழ்ச்சியுடன் மேற்கொள்ளவில்லை. ஆனல் வேறு வழிக்கு போர்த்துக்கல் இடம் வைக்கவில்லை" என்று ஸ்ரீ நேரு கூறியிருப்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.**

**15-ம்** நூற்ருண்டின் இறுதியில் வர்த்தகத்துக்காக இந்தியாவந்தடைந்த போர்த்துக்கேயர் அங்குதமது ஆட்சியைநிறுவுவதிலும் ஊக்கம் செலுத்தினர். போர்த்துக்கீசிய நாட்டைச் சேர்ந்த அப்புகூர்க்கே 1510-ம் ஆண்டில் கோவாத் துறைமுகத்தைக் கைப்பற்றி அங்கு கோட்டையும் மதில்களும் அமைத்தான். கோவா இராசதானியாக்கப்பட்டது. அங்குள்ள முஸ்லிம்களும் இந்துக்களும் கிறிஸ்தவராக்கப்பட்டனர். 16-ம் நூற்ருண்டளவில் கோவாவில் போர்த்துக்கேய ஆதிக்கம் ஸ்திரமாக நிறுவப்பட்டது. சுருக்கமாக இது கோவாவின் பூர்வீக சரித்திரம்.

மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு அடிகோலியாக இருந்த போர்த்துக்கல் ஏனைய மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகள் மீது தமது ஆதிக்கங்கள் ஆக்கிரமிப்புக்கள் அனைத்தையும் இழந்துள்ள இந்தக் காலத்திலும், தான் கோவாவில் வைத்த காலைப் பின் எடுக்காது இருந்து வந்துள்ளது. ஆசிய நாடுகள் தேசிய உரிமை பெற்றுச் சுதந்திரம் கோர முற்பட்டதும் பிரான்ஸ், டச்சு, பிரிட்டன் ஆகிய ஏனைய மேற்கு நாட்டினர் தமது ஆக்கிரமிப்புகளைக் கைவிட்டுள்ளனர். ஆனல் பல தடவைகளாக இந்தியா வெளியேறும்படி கேட்டுள்ள போதும் போர்த்துக்கல் கோவாவில் தனது காலனிஉரிமையைக்கைவிடாது தன்வசமே வைத்திருந்துள்ளது.

மலபார் கடற்கரைப் புறமாகவுள்ள கோவா, பம்பாய்க்கு அருகாமையிலுள்ள டாமன், டமானுக்குச் சுமார் 140 மைல்களுக்கு அப்பால் உள்ள டையூ ஆகிய பகுதிகள் போர்த்துக்கல் காலனிப் பகுதிகளாக இருந்து வந்துள்ளன. கோவா மீது தனக்குள்ள ஆதிக்கத்தை போர்த்துக்கல் இதுவரை கைவிடவில்லை எனினும் காலனி

ஆபிரிக்காவிலுள்ள அங்கோலா காலனி சம்பந்தமாக போர்ச்சுக்கலுக்கும் ஐ. நா.வுக்கும் நல்லுறவு இல்லை. அங்கு நடக்கும் அட்டூழியங்களைப் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டியை ஐ. நா. ஸ்தாபனம் நியமித்தது. ஆனல் அக் கமிட்டி மெம்பர்களை அங்கோலாவுக்குள் அனுமதிக்க முடியாதென்று போர்ச்சுக்கல் மறுத்ததுடன், இது தங்கள் உள்நாட்டு விஷயமென்றும் இதில் வெளியார் யாரும் தலையிடமுடியாதென்றும் திமிருடன் மறுத்து ஐ. நா. வை அவமதித்துள்ளது. இதே சமயம் கோவாவிலுள்ள 7 லட்சம் மக்களும் தங்கள் விடுதலைக்காகப் போராடிவந்துள்ளனர். இந்நிலையில ஐ. நா. ஸ்தாபனம் போர்ச்சுக்கலின் குற்றச்சாட்டை ஏற்பதற்கில்லை.

இந்திய எடுத்த கோவா நடவடிக்கையின் பலாபலன்கள் என்ன ஆகுமென்றும், ஏகாதிபத்திய சகதிகள் இனி என்ன செய்யுமென்பதும் இனியே தெரியவேண்டும். இதற்கிடையே தங்களை விடுதலை செய்த இந்தியாவை, கோவா பொதுமக்கள் நன்றியுடனும் பாராட்டுவதென்பதில் ஐயமில்லை.

ஆட்சி காலத்துக்குக் காலம் சீர்குலைந்துவந்துள்ளது.

கோவாவை போர்த்துக்கலின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என இந்தியாவிரும்பியிருந்த போதும் இந்தியா எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. கோவா தேசிய வாதிகள் நிலைமை பற்றி இரு சாரருக்குமிடையே பேச்சுவார்த்தையளவில் தகராறுகள் இருந்து வந்ததெனினும் இந்தியா இதுவரை படையெடுப்பு நடிவடிக்கை எதுவும் எடுத்ததில்லை. கோவாமீது இந்தியா படையெடுக்குமா? இல்லையா? என்ற கேள்வி பலகாலமாகப் பலநாடுகளிடையே எழுந்தது.

அங்கோலாவிலும் மொஸாம்பிக்கிலும் கோவாவிலும் வேறு பல இடங்களிலும் போர்த்துக்கல் பெரும் கொடுமைகளை விளைவித்து வருகிறது. கோவாவில் உள்ள தேசிய வாதிகள் அண்மையில் செய்த கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு போர்த்துக்கல் கடும் அடக்குமுறையைக் கையாண்டது. ஏராளமான தேசியவாதிகள் கைது செய்யப்பட்டனர். அத்தோடு ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு இந்தியா மீது குற்றஞ்சாட்டும் வகையில் ஒரு புகார்கடிதத்தையும்போர்த்துக்கல் அனுப்பிவைத்தது. கோவா எல்லையில் இந்தியா தனது படைகளைக் கொண்டு வந்து குவிப்பதாகவும் கோவா எல்லைக்குள் இந்திய விமானங்கள் பறந்ததாகவும் கோவாமீது வலுத்தாக்குதல் நடாத்தத் தயார் செய்வதாகவும் இந்தியாமீது குற்றஞ்சாட்டி போர்த்துக்கல் ஐ. நா. பாதுகாப்புசபைக்குக் கடிதம் எழுதியது. ஆனல் போர்ச்சுக்கல் இந்தியாமீது அபாண்டமான குற்றஞ் சாட்டியது எனவும் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும் இந்தியா தனது பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளது. இவ்வாறு பொய்ப் பிரசாரம் செய்துகொண்டுஇந்தியாவில், போர்த்துக்கல் காலனி ஆதிக்கத்தை மேலும் நீடிக்க முடியாது எனவும் இந்தியா தனது கடிதத்தில் தெரிவித்தது. கோவா ஐ. நா. பாதுகாப்பு சபைக்கு செய்த புகாருக்கு எதிர்மாருக கோவாஎல்லையில் போர்த்துக்கல் படைகளைக் குவிப்பதாகவும் இந்தியக் கரையோரக் கிராமங்களில்போர்த்துக்கீசிய சிப்பாய்கள்அத்துமீறிப்புகுந்து அட்டகாசம் செய்வதாயும் இந்தியா தனது கடிதத்தில் தெரிவித்தது.

# 'சினிமா,வங்கிகளை தேசியமயமாக்க வேண்டும்'

## தி. மு. கழகத்தின் தேர்தல் விஞ்ஞாபனம்

கோயம்புத்தூர், டிச. 18

"சினிமாத் தொழில், வங்கிகள், போக்குவரத்துச்சேவை ஆகியவைகளை தேசியமயமாக்க வேண்டும்" என்று திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூரில் நடைபெற்ற தி. மு. க. மகாநா' டில் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அங்கீகரிக்கப்பட்டபின் மகாநாடு முடிவடைந்தது.

ஹரிஜனங்களுக்கும், நிலமற்றவர்களுக்கும் மூன்று ஏக்கர் நஞ்சை நிலமும் ஐந்து ஏக்கர் புஞ்சை நிலமும் வழங்க வேண்டுமென்றும் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது.

சென்னை ராஜ்யம் என்ற பெயரை 'தமிழ் நாடு' என்று மாற்றுவதற்கு அரசியல் சாஸனத்தை திருத்த முயற்சி செய்வதாகவும் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது.

மறைமுக வரிகளை நீக்கி நேர்முக வரிகள் விதிக்கப்பட வேண்டுமென்றும் விஞ்ஞாபனம் கூறுகிறது.

கோவா, சீன பிரச்சினைகளில் அரசாங்கத்தின் கொள்கையை தி. மு. க. கழகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

லோக்சபைக்கு ஆறு ஸ்தானங்களிலுய் ராஜ்ய சட்ட சபைக்கு 65 ஸ்தானங்களிலும் தி. மு. கழகம் போட்டியிடும்.

## கொழும்பு விவேகானந்த சபையில் திருமுறைவிழா

கொழும்பு, திங்கள்

பன்னிரு திருமுறைகளையும், அவற்றின் அருளிய அருள் அடியார்களையும் போற்றிப் புகழுமுகமாக கொழும்பு விவேகானந்த சபையின் ஏற்பாட்டால் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் 9-ம் 10-ம் 11-ம் திகதிகளில் சபை மண்டபத்தில் திருமுறைவிழா நடைபெறும்.

இவ்விழாவில் தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், திருவாவடுதுறை ஆதீனத்து ஓதுவாமூர்த்திகள் ஆகியோர் கலந்துகொள்வர். இவர்களுடன் ஈழத்துச் சைவப் பேரறிஞர்களாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, முதலியார் செ. சின்னத்தம்பி, மு. வைரமுத்து, க. சபா, ஆனந்தர், திருமதி சத்திய தேவி துரைசிங்கம் ஆகியோரும் வேறு பலரும் திருமுறை விழாவில் கலந்துகொள்வர்.

---

## கார்வார் துறைமுக அபிவிருத்தி

புதுடில்லி, டிச, 18

கார்வார் துறைமுக அபிவிருத்திக்கு ஒரு கோடி 86 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

கோவா மக்களை விடுதலை செய்ய இந்தியா முன்வந்துவிட்டதாகக் கேட்டேன். என்னையுமறியாமல் ஏதோ மிக மகிழ்ச்சியாக இருந்தது. எனக்குத்தான் விடுதலை வந்துவிட்டது போலிருந்தது.

போர்ச்சுக்கல்ஆதிக்கத்திலே ஐநூறு ஆண்டுகளாக கோவாவிலுள்ள சுமார் ஏழு லட்சம் மக்களும் எவ்வளவு சங்கடப்பட்டிருப்பரென்பது, இலங்கையிலுள்ள நமக்குக்கொஞ்சம் தெரியும்.

யாழ்ப்பாணம் நல்லூர், திருக்கேதீச்சரம், திருக்கோணமலை, களனி முதலிய இடங்களிலே நமது கோவில்களை எல்லாம் இடித்த 'புண்ணியவான்கள், இந்த போர்ச்சுக்கீயர்கள் தான். இக்கோவில்களையெல்லாம் இடித்து, அதிலிருந்த கருங்கற்களைக்கொண்டு கோட்டைகட்டினர்கள். ஏதோ தாங்கள் தான் சாசுவதமாக சூரிய சந்திரர்கள் இருக்கும் வரை இங்கு இருக்கப்போவதாக மனக்கோட்டையும் கட்டினர்.

வாழையிலையில் கூட சாப்பிடக்கூடாதென்று நமது முன்னேர்களுக்கு உத்தரவு போட்டனர். இன்னும் என்னென்ன செய்தார்களோ! ஆனல் அவர்கள் கட்டிய இந்த ஆகாசக் கோட்டைகளெல்லாம் வீணுகி அவர்கள் இலங்கையிலிருந்து 300 ஆண்டுகளுக்கு முன்னரே விரட்டியடிக்கப்பட்டு விட்டார்கள்.

* * *

இலங்கையிலிருந்து அவர்கள் வெளியேறினலும் இந்தியா விலேமேற்குக் கடற்கரையிலே கோவா, டையூ, டாமன் எனும் மூன்று இடங்களிலும் ஐநூறு வருட காலமாக ஆதிக்கம் செலுத்திவந்தார்கள். அந்த ஆட்சியில் அங்கு மக்கள் பட்ட இம்சைகள் எவ்வளவோ!

பிரிட்டனும்,பிரான்ஸ் எனும் இரு ஏகாதிபத்திய தம்பிமார்களும் மரியாதையாக வெளியேறிய பின்பும் முதலில் வந்த போர்ச்சுகீய மூத்தண்ணு மட்டும் அசையவில்லை.

ஆறுயிரம் மைலுக்கு அப்பாலுள்ள போர்ச்சுகலின் ஒரு பகுதியே கோவாவாம்! ஆபிரிக்காவிலே அங்கோலா முதலிய இடங்களில் போர்ச்சுகல் நடத்திவரும் அடக்குமுறை ஆட்சியில் மக்கள்படும் இம்சைகள் சமீபத்தில் அம்பலமாயின என்ருலும் அவர்களுக்கும் விமோசனமில்லை. கோவா மக்களுக்கு இந்தியாவில் விடுதலை கிடைத்தால் தங்களுக்கும் விடுதலை சீக்கிரத்தில் கிடைக்குமென்பது அம்மக்களுக்கும் நம்பிக்கை. கோவா நடவடிக்கை, அவர்களுக்குப் புதிய நம்பிக்கையும் மகிழ்ச்சியுமளிக்கும்.

* * *

போர்ச்சுக்கல் மிகப் பெரிய நாடா? என்று கேட்கிருர் ஓர் அன்பர். நம் இலங்கையைவிட அது அரை மடங்கு பெரிது அவ்வளவுதான். ஜனத்தொகையோ 88 லட்சமே. நம் இலங்கையிலுள்ளதைவிடக் குறைவு. இவர்கள்தான் 10 லட்சம் சதுரமைலுக்கு மேற்பட்ட காலனிகளை வைத்து, சுரண்டல் நடத்தி அடக்குமுறை அட்டகாசங்கள் செய்து வந்தனர். இதற்கும் ஒரு முடிவு காலம் இப்போது வந்துவிட்டது.

* * *

இனி இந்தியாவில் பெரிய யுத்தம் வருமா? காஷ்மீரைப் பாகிஸ்தான் தாக்குமா? சீனுவும் வடக்கு எல்லையில் அதிக ஆக்கிரமிப்பு செய்யுமா? பிரிட்டனும் 'நேட்டோ' நாடுகளும் இந்தியாமீது நடவடிக்கை எடுக்குமா? என்று பல பல கேள்விகள் எழுகின்றன. பெப்ரவரி மாதம் எட்டுக் கிரகங்களும் ஒன்று சேரும் நாளும் நெருங்குகின்றது. எல்லாம் எனையாளும் ஈசன் செயல்!

## சிங்களவருக்கு சிங்களம்; தமிழருக்குத் தமிழ்போல...

# 'பறங்கியருக்கு ஆங்கிலம் வேண்டும்'

பேராதனை, திங்கள்

"சிங்களப் பெற்றோர்களும் தமிழ்ப் பெற்றோர்களும் தமது குழந்தைகளை முறையே சிங்களத்திலும் தமிழிலும் கல்வி கற்கவேண்டியது முக்கியம் எனக் கருதுகிறார்கள். இதுபோலவே பறங்கியருக்கும் தமது குழந்தைகள் ஆங்கிலத்திலேயே கல்வி கற்பதை முக்கியமாகக் கொள்வர். பறங்கியருக்கு இந்த உரிமை வழங்கப்படாவிட்டால் அவர்களது அடிப்படையான கலாச்சாரத்தையே பறிமுதல் செய்வதாகும். இவ்வாறு இலங்கை கிறிஸ்தவ சபையினால் வெளியிடப்படும் கிறிஸ்தவ செய்தி இதழின் சமீப வெளியீட்டில் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி இதழில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஒருவருக்கு, அவரது தாய் மொழியிடம் பெருமதிப்புண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. தமது மொழிக்கும் சமயத்துக்குமாக மனிதர் தமது உயிரையும் தியாகம் செய்வதற்குத் தயாராக இருந்திருக்கிறார்கள். 'சிங்களம் மட்டும் என்பதற்குச் சிங்கள மக்கள் விரும்பி முயற்சி செய்தமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். 'சிங்களம் மட்டும்' மசோதாவுக்கு தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்பும் அவர்கள் தமது மொழிக்கு ஏற்படக்கூடிய அபாயத்துக்கு பரிகாரம் தேட முயன்றதும் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

பல வெளிநாடுகளில் அண்மையில் நிகழ்ந்துள்ள சம்பவங்களும் இதை எடுத்துக் காட்டியுள்ள. மொழியுரிமையின் முக்கியத்துவத்தைப் பல நாட்டினர். ஏற்கெனவே உணர்ந்து அது நிலவுவதற்கு வகைசெய்துள்ளார்கள். எமது நாட்டிலும் மொழி உரிமை வழங்கப்பட்டால் நாட்டிலுள்ள ஒரு பெரும் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடி விடுவதுபோலாகும்.

தமிழ் மொழிமட்டும்தான் சிறுபான்மை மக்களது மொழியாகாது. தமிழ் பெற்றோரும் சிங்களப் பெற்றோரும் தத்தம் மொழியிலேயே தமது குழந்தைகள் கல்வி கற்பதை எவ்வளவு முக்கியமெனக் கருதுகிறார்களோ அவ்வளவிற்கு பறங்கியரும் தமது குழந்தைகள் ஆங்கிலத்தில் கல்விகற்பதை முக்கியமெனக் கருதுகிறார்கள். இந்த மொழியுரிமையைப் பறங்கியருக்கு வழங்காது விடுவது அவர்களது கலாச்சாரத்தையே பறிமுதல் செய்வதுபோலாகும்.

இதைப் போல அநீதியான முறை இலங்கையில் எந்தக் காலத்திலும் கால் வைத்ததில்லை. பிரிட்டிஷார் தமிழ் சிங்களக் கல்வியை உதாசீனம் செய்திருக்கலாம். அதனால் நாட்டுக் கலாச்சாரத்துக்கும் பெரும் தீங்கு விளைவித்திருக்கலாம். ஆனால் காலனி ஆட்சி எதுவும் மக்களைத் தமது தாய் மொழியில் கல்வி கற்பதைத் தடுக்குமளவுக்கு கொடூரமாக விருக்கவில்லை.

ஆங்கிலக் கல்வியை விட்டு சிங்கள மொழிவில் பறங்கிய பிள்ளைகளையும் கல்விகற்கும்படி கல்விக் கமிஷன் கோருவது சிறுபான்மை மக்களின் நலன்களைச் சிதைப்பதாகும். கல்விக் கமிஷனின் இந்தயோசனை ஒரு பிரேரணையாக மட்டுமே தற்போது இருக்கிறது. இதுபற்றி இங்கு பிரஸ்தாபிப்பதனால் மக்களின் உணர்ச்சியைத் தூண்டுவதாகும். இது விஷயம் பற்றி மக்கள் ஆராய்ந்து தமது ஆட்சேபனையைத் தெரிவிப்பது ஜனநாயக முறையில் தமது உரிமைக்குப் போராடுவதாகும்."

## சேவைக்கால உபகாரப்பணம்

### பஸ் ஊழியர்களுக்கு இம்மாதம் கிடைக்கும்

கொழும்பு, திங்கள்

பஸ் கம்பனிகளில் வேலை செய்து வந்த ஊழியர்களுக்கு இன்னும் கொடுபவேண்டிய சேவைக்கால உபகாரப் பணத்தை இம்மாதம் இ. போ. சபை வழங்கும்.

இந்தப் பணத்தை வழங்குவதற்கு 1958-ம் ஆண்டில் சபை நடவடிக்கை எடுத்ததென்று சபைக் காரியதரிசி தெரிவித்துள்ளார். ஆனால் இதற்கான பத்திரங்கள் கம்பனிகளுக்கு அனுப்பப்பட்ட பொழுது 45 கம்பனிகள் தான் அவற்றை நிரப்பி அனுப்பினவாம்.

காலஞ்சென்ற பிரதமரின் உத்தரவின்மீது தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகையில் 25 வீதம் வழங்கப்பட்டது.

பின்னர் சென்ற வருடம் மேமாதத்தில் மற்றும் 25 வீதம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மிகுதிப்பணம் இம்மாதத்துக்குள் வழங்குவதற்கு நடவக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

---

## நெருப்புக் காய்ச்சல் அதிகரிப்பு

கொழும்பு, திங்கள்

இலங்கையில் நெருப்புக் காய்ச்சல் அதிகரித்துள்ளதாக சுகாதார இலாகா நடத்திய பரிசீலனையிலிருந்து தெரிய வந்துள்ளது. ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் 753 பேர் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டனர். அதற்கு முந்திய மூன்று மாதங்களில் 502 பேர்களும் ஜனவரி, பெப்ரவரி மார்ச் மாதங்களில் 402 பேர்களும் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டனர்.

இரத்தினபுரி, கண்டி, காலி, அநுராதபுரம் ஆகிய இடங்களில்தான் நெருப்புக்காய்ச்சல் அதிகரித்துள்ளன.

---

கொழும்பு, திங்கள்

பிரபல பிரிட்டிஷ் சத்திர சிகிச்சை நிபுணர் இலங்கை வந்துள்ளார். எலும்பு முறிவு, நோவு, விபத்துக் காயம் ஆகியனபற்றி அவர் சுகாதார இலாகா அதிகாரிளுடன் விவாதிப்பார்.

---

## "அரசாங்கத்தை எங்களிடம் ஒப்படையுங்கள்"

### தோட்டத் தொழிலாளர் கூட்டத்தில் டாக்டர் பெரேரா

அட்டன், திங்கள்

**லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் வருடாந்த மகாநாட்டின் இரண்டாவது நாள் விழா அட்டன் பிறின்சஸ் தியேட்டரில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. செஞ்சட்டை அணிந்திருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களும் மாதர்களும் இதில் கலந்து கொண்டார்கள். திருமதி விவியன் குணவர்த்தன, மாதர் சங்கத்தின் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

பெருந்திரளான மக்கள் மத்தியில் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"உங்கள் மத்தியில் நான் பேசப்போவதையிட்டு, பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆயிரக் கணக்காக குழுமியிருக்கும் உங்களைக் கண்டதும் நீங்கள் சரியான பாதையை வகுத்துக் கொண்டீர்கள் என்ற எண்ணம் என் மனதில் தோன்றுகிறது. உங்களுக்கும் தொண்டர்களுக்கும் முக்கியமான கடமையொன்று இருக்கிறது. நாட்டின் உற்பத்திக்கு ஆதரவு கொடுத்து, பொருளாதார நிலைமையை விருத்தி செய்ய வேண்டும். தற்போதுஏற்பட்டிருக்கும்நிலைமை மேலும் நீடிக்குமானல் தேசிய பொருளாதாரம் நிச்சயம் பாதிக்கப்படும். நீங்கள் எல்லோரும் லங்கா சமசமாஜக் கட்சிக்கொடியின் கீழ் ஒன்றுதிரளும்படி உங்களைக் நான் கேட்டுக்கொள்கின்றேன்."

"எங்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும்", "இது எங்கள் நாடு", "எங்கள் சம்பளத்தை உயர்த்துக" என்று எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்திக் கொண்டு சுமார் நாலாயிரம் தொண்டர்களும் பெண்மணிகளும் வீதி வழியே வலம் வந்துகொண்டிருந்தனர். பிறின்சஸ் தியேட்டர் சந்தியிலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம், டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா, திரு. அனில்முனசிங்கா எம். பி., திரு. எட்மண்ட் சமரக்கொடி எம். பி., திருமதி விவியன் குணவர்த்தன எம். பி., லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுக் காரியதரிசி திரு. எஸ். எம். செல்லையா, அட்டன் நகரசபைத் தலைவர் திரு. பி. ஜி. ஆரியதிலகா ஆகியோர் தலைமையில் சென்று, டன்பார் மைதானத்தை அடைந்தது. இந்த மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன், லங்கா சமசமாஜக் கட்சி எவ்வித அரசியல் ஒப்பந்தமும் வைத்துக் கொள்ளவில்லையென்றும், ஆனல் பொதுத் தேர்தல் சமயத்தில் மாத்திரமே ஓர் உடன்படிக்கை வைத்துக் கொண்டது என்றும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "தொழிலாளர்களைப் பாதிக்கும் வண்ணம் அமைந்துள்ள சில பட்ஜட் திட்டங்

(8-ம் பக்கம் பார்க்க)

## அதிக பஸ்கள் வேண்டும்

கொழும்பு, திங்கள்

போக்குவரத்து சேவையை மேலும் சீர்திருத்துவதற்குப் புதிய பஸ்கள் வாங்குவதற்கென அதிக நிதி ஒதுக்கும்படி இலங்கை போக்குவரத்துச் சபை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

அடுத்த வருடத்துக்கான திட்டங்களைப் புதிதாகத் தயாரிக்கும்படியும் கட்டிடங்களுக்கு அதிக பணம் ஒதுக்கும்படியும் இ. போ. ச. சபையைதொழில் தேசியமய சேவைகள் அமைச்சு தனது பதிலில் கேட்டுள்ளது.

பஸ்கள் பராமரிப்புக்கு கட்டிடங்கள் அவசியமென்றும் இல்லையேல் சேதம் அதிகரிக்குமென்றும் அமைச்சின் திட்டக் கமிட்டி கருத்துத் தெரிவித்திருந்தது.

அதிக பஸ்கள் வாங்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று இ. போ. சபை அமைச்சரைக் கேட்டுள்ளது.

உடனடியாக அதிக பஸ்கள் வாங்காவிட்டால் பஸ் சேவையில் சீர்குலைவு ஏற்படுமென்றும் இ. போ. சபையை சுட்டிக்காட்டியுள்ளது.

## தொழில் இலாகா வழக்குகள்

### பலருக்கும் அபராதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொழில் சட்டத்துக்கு மாருக வியாபாரஸ்தாபனங்களைத் திறந்து வைத்திருந்ததாக தொழில் இலாகாவால் தொடரப்பட்ட வழக்குகள் யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்ரேட் திரு. சி. சி. சோமசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் 'ரோயஹவுஸ்' சைச் சேர்ந்தஎம். ஏ. சி. முத்து முகம்மதுஎன்பவருக்கு60 ரூபாயும், யாழ்ப்பாணம் விவேகானந்த ஜவுளிக்கடையைச் சேர்ந்த ஏ. மயில்வாகனம் என்பருக்கு 10 ரூபாயும், ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த ஏ. ஆர். வினசித்தம்பி என்பவருக்கு 15 ரூபாயும், சென் செபஸ்தியான் ஸ்ரோர்ஸைச் சேர்ந்த ஏ. எம். முத்தையா என்பவருக்கு 15 ரூபாயும் அபராதமாக விதிக்கப்பட்டன. இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்தனர்.

## தென்னபிரிக்க நகரங்களில் வெடி குண்டி வீச்சு

லண்டன், டிச. 17

ஜொகானிஸ் பார்க்கிலும், போர்ட் எலிஸபெத்திலும் உள்ள தபாலாபீஸ்கள், இதர முனிசிபல் கட்டிடங்கள் ஆகியவற்றில் வெடிகுண்டுகள் வீசப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது. டர்பான், கேப்டவுன் ஆகிய தென்னபிரிக்க நகரங்களிலும் குண்டுகள் வெடித்தன. இச் சம்பவத்தின் விளைவால் ஒரு ஆபிரிக்கர் கொல்லப்பட்டார். இன வேற்றுமைகளான கட்டிடங்களைத் தகர்க்கும்படி துண்டுப்பிரசுரங்கள் ஆபிரிக்கர்களிடையே விநியோகிக்கப்பட்டதைத் தொடர்ந்து இச் சம்பவங்கள் நடைபெற்றன. பொலிசார் இக்கட்டிடங்களை இப்போது காவல் செய்து வருகின்றனர்.

விற்பனையாகின்றன !

1962-ம் ஆண்டு

தினக்குறிப்பு

மாணவர்களுக்கென தனி டயறி.
அவர்களுக்குப் பயன்படும்
பல அம்சங்களுடன்.
விலை சதம் 75

பொதுமக்கள் பாவிக்கக்கூடியது
இதில் பல விசேஷ அம்சங்கள்
விலை சதம் 75

தபால் செலவு பிரத்தியேகம்

ஈழநாடு லிமிட்டெட்
63, சிவன் கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்
தமிழ்ப் பண்ணை
193, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

மலிவு விற்பனை

டயரும்ஸ் - யாழ்ப்பாணம்

# கடியன் சேனையை விஸ்தரிக்கத் தீர்மானம்

நாவலப்பிட்டி, திங்கள்

நாவலப்பிட்டிக்கு சமீபத்திலுள்ள கடியன்சேனை கடை வீதியை அபிவிருத்தி செய்வதென்று இப்பகுதி பஸ்பாகை கிராமக் கமிட்டித் தலைவர் திரு. எஸ். மாரசிங்கா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முக்கியமாக கடியன் சேனையில் வாரந்தோறும் ஞாயிறு சந்தை யொன்றை நடாத்துவதெனவும், விரைவில் அரசாங்கத்திடம் உதவி பெற்று ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் புதிய சந்தை நிலையிடம் ஒன்று நிறுவுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கடியன் சேனைக்கு பொது மயானம், நிறுவ காணி வாங்குவதெனவும் தண்ணீர் வசதியை சீர்படுத்திக் கொடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. பொது மலசல கூடம் கட்ட ஆறுயிரம் ரூபாயும், வடிகால் கட்ட பத்தாயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டது.

ரம்புப்பிட்டிக்கு மின்சார வசதிபெற முயற்சிப்பதெனவும், இப்பகுதியில் வீடுகட்ட காணி பெறுவதற்காக ஆறுயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டது.

## உதைபந்தாட்டம்

### வதிரி கோஷ்டி

பருத்தித்துறை, ஞாயிறு

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக உதைபந்தாட்டப் போட்டிகள் அல்வாய் சாமணந்தரை விளையாட்டரங்கில் ஆரம்பமாகி இருக்கிறது.

வதிரி பவுண்டேசன்கோஷ்டி வீரர்கள் அல்வாய் வாலிபர் கழகக் கோஷ்டியை 2 கோல்களால் தோற்கடித்தது. திரு. இராசையா மத்தியட்சம் வகித்தார்.

திக்கம், நெடியகாடு கோஷ்டி வீரர்கள் கலந்து கொண்ட போட்டியில் திக்கம் கோஷ்டியினர் ஒரு கோல் போட்டு நெடியகாட்டைத் தோற்கடித்தனர். இப்போட்டிக்கு திரு. கே. கார்த்திகேசன் மத்தியட்சம் வகித்தார்.

## ஆலய பரிபாலனசபை

கொடிகாமம், திங்கள்

"ஒரு நாட்டுக்குச் ஜீவநாடி அங்குள்ள கோயிலாகும். கோயிலில் சிறப்போடு பூஜை நடந்தால்தான் அந்நாடு வரட்சியின்றித் துலக்கமடையும். கோயில் நிர்வாகத்திலோ பூஜை முறையிலோ பாகுபாடு இருக்காமல் இறைவன் சந்நிதியில் யாவரும் ஒன்றென்னும் உயரிய கொள்கையுடன் நாம் ஒழுகி எல்லோரும் ஒன்று திரண்டு கோயிலைப் பரிபாலித்து வருவதே பெறற்கரிய மானிடப்பிறவியெடுத்ததன் பேருகும்"

எழுதுமட்டுவாள் தெற்கிலுள்ள பெரியகேணி சிவஞானப் பிள்ளையார் கோயிற் பரிபாலன சபையொன்றை அங்குரார்ப்பணஞ் செய்யுமுகமாக எழுதுமட்டுவாள் வாசிகசாலை மண்டபத்தில் கூடிய கூட்டமொன்றுக்கு தலைமை தாங்கிப் பேசும்போது திரு. கே. சண்முகம் மேற்கண்டவாறு கூறினர். ஒவ்வொரு மாதப் பூசையும் ஒவவொரு குடும்பத்தினர் எடுத்து நடத்துவதெனவும், திருவெம்பாவை தினங்களில் திருப்பள்ளிஎழுச்சி, திருவெம்பாவை ஓதல், திருவாதவூரடிகள் புராணம் படித்தல், முடிவு நாளைச் சைவப் பிரசங்கங்கள் வைத்துச் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### பரிபாலனசபை உறுப்பினர்

தலைவர் திரு. கே. சண்முகம், உபதலைவர் திரு. சி. சின்னையா காரியதரிசி திரு. வி. சின்னத்தம்பி, உபகாரியதரிசி திரு. வி. சங்கரப்பிள்ளை' தனதிகாரி திரு. க, வேலுப்பிள்ளை.

## தீவிபத்தில் 250 பேர் பலி

நியுயோர்க், டிச. 18

பிரேஸிலில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தில் குறைந்தது 250 பேர்களாவது மாண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

## இளைஞனின் வீரச்செயல்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை விநயகமுதலியார் வீதியைச் சேர்ந்த வ. சர்வானந்தம் என்னும் 17 வயது இளைஞர் பல வீரச் செயல்களைச் செய்துவருகிறார். ஒரே தடவையில் மார்பிலும் தொடையிலும் இரு கார்களை ஏற்றியதுடன் தனது மார்பில் லொறி ஒன்றையும் ஏற்றினர்.

சுமார் 200 றுத்தல் நிறையுடைய கல்லை மார்பில் வைத்து 14 றுத்தல் சுத்தியலால் அடிப்பித்து உடையச் செய்தார். இதுபோன்ற வேறுபல தீரச் செயல்களைச் செய்யவும் முயற்சி எடுத்து வருகிறார்.

பருத்தித்துறையைச் சோந்த 22 வயது வாலிபரான மா. துரைரத்தினம் என்னும் வாலிபரும் இதுபோன்ற பல தீரச் செயல்களைச் செய்து "இளமா மல்லன்" என்ற பாராட்டையும் பல பரிசில்களையும் பெற்றுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் மாவு தட்டுப்பாடு

## இறக்குமதி கஷ்டத்தால் தோன்றியுள்ள நிலைமை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் மாவுக்கும் பழுப்புச் சீனிக்கும் மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்துக்கு இறக்குமதி செய்வதிலுள்ள கஷ்டத்தால் மாவுக்கு பற்ருக்குறைதோன்றியுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்றுவரும் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினுல் மாவு இறக்குமதி செய்யப்படாமையால் இதற்கு அரசாங்கம் மாற்று நடவடிக்கையை எடுப்பதற்கு முயற்சித்து வருவதாகத் தெரிகிறது.

திருக்கோணமலைதுறைமுகத்திலிருந்து மாவு விநியோகஞ் செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் இதுபற்றி இங்குள்ள கூட்டுறவு யூனியன் ஆகியவற்றிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டுள்ளதாகவும்தெரிகிறது.

இதுகாலவரையும் யாழ்ப்பாணத்துக்கு மாவு புகையிரத மூலம் அனுப்பப்பட்டு வந்தது. சத்தியாக்கிரகத்தின் போது மாத்திரம் கொழும்புத் துறைமுகத்திலிருந்து நேரடியாகப் பெறப்பட்டது. இம்முறை திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து விநியோகஞ் செய்ய ஒழுங்கு செய்யப்படுவதாகத் தெரிகிறது.

திருக்கோணமலைத் துறைமுகத்திலும் வேலை நிறுத்தம் பரவுமானுல் கஷ்டமேற்படுமென்றும் அப்படியானுல்அங்கு சென்று பெறுவது சாத்தியமா என்பதுபற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.





## மலிவு விற்பனை!

பங்களூர் சில்க் சேலைகள்

றிபன் போடர்கள் போட்டவைகளும்

கோல்ட் பைப்பிங் போட்டவை.

பிங், நீலம், ஆரஞ்சு, கோல்ட், பேப்பிள் பச்சை வேறு பல நிறங்களில் உண்டு.

சாதாரண விலை 29-50

விற்பனை விலை 19-50

**டயரும்ஸ்**

யாழ்ப்பாணம்.

10

உங்கள் நத்தார் பண்டிகை கொண்டாட அரிய சந்தர்ப்பம்!

**மலிவு விற்பனை**

**டயரும்ஸ் - யாழ்ப்பாணம்**

## கஞ்சா வைத்திருந்த சாமியார்

### ரூ. 100 அபராதம்

பருத்தித்துறை, ஞாயிறு ரோந்து சுற்றுவந்த வல்வைப் பொலிசாரால் தொண்டமனாற்றில் வைத்து கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட காரந்தனையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மாணிக்கம் சாமியைப் பொலிசார் நீதிபதி முன் ஆஜர் செய்தனர்.

காவி வஸ்திரங்களுடனும் பை உறைகளுடனும் காட்சியளித்த சாமியாருக்கு ரூ. 100 அபராதம் விதித்து அபராதம் செலுத்தத் தவறின் 1 மாதம் கடுழியச் சிறைத் தண்டனை அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார்.

## கிறிஸ்தவ விரிவுரை

பருத்தித்துறை, ஞாயிறு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மெல்போர்ன் தத்துவக்கல்லூரி அதிபர் டாக்டர் ரொலின் வில்லியம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் சமயமும் மனிதனும் என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினர்.

ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. கே. பூரணம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற கிறிஸ்தவ பிரசங்கத்தின்போது இந்துசமயப் பிரமுகர்களே பெரும்பான்மையாக இருந்தனர் என்பது குறிப்பிடக்கூடியதாகும்.

## அபிவிருத்திவரி விதி விலக்கு

கொழும்பு, திங்கள் உப தபாற் கந்தோர் அதிகாரிகள் (சப் போஸ்ட்மாஸ்டர்கள்) தேசிய அபிவிருத்திவரி கட்டவேண்டியதில்லை.

வருமானவரிக் கமிஷனர் இது பற்றி பதில் போஸ்ட் மாஸ்டர்ஜெனரல் திரு.டி. சிவப்பிரகாசத்துக்குத் தெரிவித்துள்ளார்.

அக்டோபர் நவம்பர் மாதத்தில் இவர்களுடைய சம்பளத்தில் தேசிய அபிவிருத்தி வரியாகக் கழிக்கப்பட்ட தொகையைத் திருப்பிக் கொடுப்பதில் ஆட்சேபமெதுவும் இருக்க மாட்டாதென்று வருமானவரிக் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

# இ. போ. சபை நிர்வாகத்தில் தொழிலாளருக்கு இடம்

## கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கை போக்குவரத்து சபை தொழிலாளர்கள் கடந்த வேலை நிறுத்தத்தின் போது ஐக்கியத்தைப் பலப்படுத்திக் கொண்டமைக்கு பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமொன்று யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கங் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் பொதுக் கூட்டம் திரு. எஸ். பி. நடராஜா தலைமையில் நடைபெற்றது.

வாலிபர் சங்க அங்கத்துவத்தை ஆதரிப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. வருகிற பெப்ரவரி மாதத்தில் மகாநாடொன்றை நடாத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை போக்கு வரத்து சபை இப்பொழுது பெற்று வரும் ஒத்துழைப்பிலும் கூடிய ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு போக்கு வரத்து சபை நிர்வாகத்தில் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் அங்கத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.




## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

செவ்வாய் 19-12-61

காலை 6-30 திருவெம்பாவை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்.

இரவு 7-00 கே. மகாதேவன் - பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இலசச்சித்திரம், 9-45 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 சிதம்பரம் டி. நடராஜன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 சிதம்பரம் டி. நடராஜன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

மாலை 7-30 கல்வெட்டுக் கல்வி - பேச்சு, 7-45 சீதாமணி ஸ்ரீநிவாசன் - பாட்டு, 9-15 சென்னை அஞ்சல், 9-30 மெல்லிசை, 9-50 இலக்கியவாசகம்.

## தேக்கடியில் மலாயா மன்னர்

திருவனந்தபுரம், டிச. 18 இப்பொழுது இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து வரும் மலாயா பேரரசரும் ராணியும் நேற்று தேக்கடியில் பெரியாறு அடைக்கல வனத்தில் வன விலங்குகளைப் பார்த்து மகிழ்ந்தனர்.

மலிவு விற்பனை
டயரும்ஸ் - யாழ்ப்பாணம்

# அரசாங்கத்தை எங்களிடம்..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

களை நாங்கள் எதிர்த்தோம். அண்மையில் நடைபெற்ற இ. போ. ச. பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். சாதி மத வேறுபாடின்றி பஸ் தொழிலாளர் சகலரும் ஒன்றுபட்டு தங்களது உரிமைக்காகப் போராடி வெற்றியும் பெற்ருர்கள். நீங்கள் சம்பள உயர்வு கேட்டபொழுது உங்களது கோரிக்கை மறுக்கப்பட்டது. தோட்டங்கள் நஷ்டத்தில் ஓடுவதாக அரசாங்கம் கருதினல், தோட்டங்களை தேசியமயமாக்கலாம். அரசாங்கத்தினல் இது முடியாவிட்டால் எங்களிடம் அரசாங்கத்தை ஒப்படைக்கவும்".

புலத்சிங்கள எம். பி. திரு. எட்மண்ட் சமரக்கொடி தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: 'சிறுபான்மையினரின்பிரச்சினைகளை தீர்க்கும்வரை எந்த அரசாங்கமும் திறம்படச் செயலாற்றமுடியாது. இந்தப் பிரச்சினைகளை லங்கா சமசமாஜக் கட்சியினல்மட்டுமே தீர்க்கமுடியும்'.

"ராஜரத்ன, ஆர். ஜி. சேனநாயக்கா போன்றவர்கள் பிளவுகளை உண்டாக்க முயற்சிக்கின்றனர். தொழிலாளர் யாவரும் ஒன்றுபட்டால், இந்த நாட்டில் அவர்களுக்கு இடமிருக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். முதலாளி வர்க்கமும் அவர்களின் அரசாங்கமும் நிச்சயம் வீழ்ச்சியடையும் இதைத்தொடர்ந்து தொழிலாளர்களின் அரசாங்கம் ஒன்று அமையும். இந்த நாடு தங்களின் நாடு என்றும், தங்களின் பிரச்சினைகள் யாவும் இங்கு தான் தீர்க்கப்படல் வேண்டும் என்றும் தொழிலாளர்கள் மனதில் பதியவேண்டும்." இவ்வாறு திருமதி விவியன் குணவர்த்தன பேசுகையில் குறிப்பிட்டார்.

அண்மையில் நடைபெற்ற பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைப் பாரர்ட்டியும் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை ஆதரித்தும் இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாகக் கூட்டத்தில் நிறைவேறியது.


விரைவில் எதிர்பாருங்கள்!
ராஜமணி பிக்சர்ஸ்
பாசமலர்

கடைசி வாரம்
கிங்ஸ்லி பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா
நடித்த




சிறந்த கதை அமைப்பும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் நடிப்பும் ஒருங்கே அமைந்த சித்திரம்.

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30)
சந்தியா, மகிபால் நடித்த
'நவ்ரங்' NAVRANG (Hindi)


# இந்திய ராணுவம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கை விரைவில் முடிவடைந்து அப்பகுதி மக்கள் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழ்க்கை நடத்துவார்களென்று ஸ்ரீ நேரு தெரிவித்தார்.

### 3 இடங்களில் பிரவேசித்தன

கோவாவில் கடல், விமான, தரைப்படைகள் இன்று அதிகாலை 3 இடங்களில் பிரவேசித்து விட்டதாய் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் அறிவித்தார்.

கோவா, டையூ, டாமன் ஆகியன அன்னியப் பிரதேசம் இல்லை என்றும் பாரதத்தின் ஒரு பகுதியே அவை என்றும் திரு. மேனன் அறிவித்தார்.

"14 வருடம் பொறுமையாகக் காத்திருந்தோம். ஐ. நா. சாசனத்தையும் பொது மக்கள் அபிப்பிராயத்தையும் போர்த்துக்கல் மீறியுள்ளது. இந்திய எல்லையில் அட்டூழியம் புரிந்து ஆத்திரமூட்டியுள்ளது" என்றும் பாதுகாப்பு மந்திரி அறிவித்தார்.

சூயஸ்கால்வாய் வழியாக ஆயுதங்களுடன் வந்த போர்த்துக்கல் போர்க்கப்பலுக்கு இடம் கொடுக்க மறுத்ததற்காக ஐக்கிய அராபியக்குடியரசுக்கு திரு. மேனன் நன்றி தெரிவித்தார்.

## யு. எஸ்., பிரிட்டன், ஆஸி கண்டனம்

இந்தியா கோவாமீது ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது குறித்து அமெரிக்க ராஜாங்க இலாகா கண்டனம் தெரிவித்தது. அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் அதற்குமுன் தம் உயர் ஆலோசகர்களைக் கூட்டி ஆலோசனை செய்தார்.

ராணுவ நடவடிக்கையைக் கேட்டு பிரிட்டன் வருத்தம் தெரிவித்தது.

ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ராபர்ட்மென்ஸீஸ இந்தியப் படைகள் கோவாவுக்குள் பிரவேசித்ததையிட்டு கண்டனம் தெரிவித்தார். பஞ்சிம் கோவாபகுதியை இந்தியத் துருப்புக்கள் முற்ருகச் சூழ்ந்துகொண்டன என்றும், தலைநகருக்கு அண்மையில் சமீபித்துவிட்டதாயும் இரவு 9 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

போர்த்துக்கல் ராணுவம் சொற்ப எதிர்ப்பு மட்டும் காட்டியபின் பின்வாங்கியதாயும், பல இடங்கள் இந்தியர்களிடம் வீழ்ச்சியடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது. இரு இடங்களில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு போர்த்துக்கேயர் சரணடைந்தனர். பலர் சிறை பிடிக்கப்பட்டனர்.

## கோவா துறைமுகம் கைவிடப்பட்டது

கோவா துறைமுகம் கைவிடப்பட்டதாயும், இந்திய முன்னணிப் படைகள் வழியில்தென்படும் எதிர்ப்புக்களை நாசமாக்கி, பின்னல் வரும் படைகளுக்கு இடமளித்து வருவதாயும் கூறப்படுகிறது. கோவா நிர்வாகம் முற்ருகச் சீர்குலைந்துவிட்டது. புதுடில்லியிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைக்கான காரணங்கள் விளக்கிக் கூறப்பட்டன.

## கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

நேரு அரசாங்கத்தின் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றது. மேஜர் ஜெனரல் கென்டரை கோவா ராணுவ கவர்னராக திரு. கிருஷ்ணமேனன் நியமித்திருக்கிருர்.

## பிரிட்டன் கை விரித்தது!

கோவா விஷயத்தில் தம்மால் ஒன்றும் செய்யமுடியாதென்றும், காமன்வெல்த் நாடான இந்தியாவைப் பகைத்துக்கொள்ள முடியாதென்றும் பிரிட்டன் போர்த்துக்கலுக்கு அறிவித்துவிட்டது!

## பாதுகாப்பு சபைக்கு விண்ணப்பம்

தங்கள் பகுதிக்குள் பிரவேசித்துள்ள இந்தியத் துருப்புக்களை வாபஸ்பெறுமாறு உத்தரவிடவேண்டுமென போர்த்துக்கல் ஐ. நா. பாதுகாப்பு சபையைக் கேட்டிருக்கிறது.

## ரஷ்யா ஆதரவு

இந்தியாவுக்கு விஜயம்செய்திருக்கும் ரஷ்ய ஜனதிபதி திரு. பிராஸ்னேவ், இந்தியா கோவாவை விடுவிக்க எடுத்துள்ள நடவடிக்கைக்கு ரஷ்யாவின் ஆதரவைத் தெரிவித்தார். இந்திய மக்களின் விருப்பத்தை ரஷ்யா ஆதரிக்கிறதென்றும் அவர் கூறினர்.

ரஷ்ய வெளிநாட்டிலாகா இந்தியாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை சீக்கிரம் வெளியிடவிருப்பதாயும் தெரிகிறது.

இந்தோனேஷியா, டூனிஸியா ஆகிய நாடுகளும் இந்திய நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

## காரியக்கமிட்டி திருப்தி

புதுடில்லியில் உயர்தர காங்கிரஸ் காரியக்கமிட்டி இன்று கூடி அரசாங்க நடவடிக்கைபற்றித் திருப்தி தெரிவித்தது.

## பம்பாயில் குதூகலம்

இந்திய ராணுவம் கோவாவில் பிரவேசித்த செய்தி பம்பாயைப்போல் எங்குமே குதூகலமாக வரவேற்கப்படவில்லை. 14 வருடங்களுக்குமுன் சுதந்திரதினத்தின்போது பம்பாய் கொண்டிருந்த விழாக்கோலத்தை இன்று காணமுடிந்தது. காலையில் அங்குள்ள பல்லாயிரக்கணக்கான கோவானியர்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்கள்.

## இரத்த அழுத்த நோய்க்கு புது மருந்து

நியுயோர்க்

"இரத்த அழுத்தத்துக்கு ஒரு புதிய மருந்து கண்டு பிடித்திருக்கிருர்கள். கடும் இரத்த அழுத்தத்தை இதுகட்டுப்படுத்தவல்லது என்று புலனுகியுள்ளது." இவ்வாறு அமெரிக்க டாக்டர்கள் மூவர் அமெரிக்க மருத்துவச் சங்க சஞ்சிகையில் எழுதியுள்ளனர்.

"குவானெத்திடின்" என்பது புதிய மருந்தின் பெயர். கடும் இரத்த அழுத்த நோய்க்கு மருத்துவம் செய்யும் துறையில் இம் மருந்து புதிய வழியைக் கடைப்பிடிக்கிறது. தற்போது பழக்கத்திலுள்ள பிற மருந்துகளினின்றும் பெரிதும் வேறுபாடானது புதியமருந்து. புதிய மருந்துமூளையையோ நரம்புகளையோ பாதிப்பதில்லை. இரத்தக் குழாய்களிலேயே இது வேலை செய்கிறது.


ஞாபகப்படுத்துகிறேம்!
மலிவு விற்பனை
டயரும்ஸ் யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.